# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 155/ந/2023
நாள் 23.04.2025

| | | |
|---|---|---|
| திரு.V.பழனிவேலு,<br>மயிலாடுதுறை, மயிலாடுதுறை மாவட்டம் | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையாளர்,<br>மயிலாடுதுறை நகராட்சி, மயிலாடுதுறை மாவட்டம் | – | எதிர்மனுதாரர் |

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை, கொறநாடு, திருமஞ்சனவீதி, கதவு எண்.48 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.பழனிவேலு என்பவரின் 23.05.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.05.2023 அன்று பெறப்பட்டு, 155/ந/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை, கொறநாடு, திருமஞ்சனவீதி, கதவு எண்.48 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.பழனிவேலு என்பவர் தமது 23.05.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

நான் மயிலாடுதுறை நகராட்சி கொறநாடு 48 திருமஞ்சனவீதியில் நிரந்தரமாக வசித்து வருகிறேன். எனது ஆதார் எண்.9869 5090 2333 ஆகும். நகராட்சி சொத்து வரி விதிப்பு எண்.097/18325 பாதாள சாக்கடை வரிவிதிப்பு எண்.097/008/90021. நான் மூத்த குடிமகன். நான் தமிழ்நாடு அரசு அனைத்து துறை அரசு ஓய்வூதியர்கள் சங்கத்தின் மயிலாடுதுறை மாவட்டச்செயலாளராகவும் இருக்கிறேன். நகராட்சிக்கு நானும், எனது சங்கத்தைச் சார்ந்தவர்களும் வரி செலுத்துவதால், அரசு நிதி மற்றும் நகராட்சி வரிப்பணம் முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை அறிய உரிமை உள்ளது.

மயிலாடுதுறை நகர்மன்ற தீர்மானம் எண்.70/நாள்.27.05.2022–ல் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

70. மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகன எண்.TN.51-S 5146–க்கு 2022–2023ம் ஆண்டுக்கு தகுதிச்சான்று பெற்றதற்கான செலவின தொகை ரூ.16758/– (ரூபாய் பதினாறாயிரத்து எழுநூற்று ஐம்பத்து எட்டு மட்டும்) ஆகும். இத்தொகையினை வாகன ஓட்டுனர்

திரு.எ.ஏழுமலை அவர்களால் ரொக்கமாக செலுத்தப்பட்டு உரிய சான்று பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவினத்தொகையினை திரு.எ.ஏழுமலை வாகன ஓட்டுனர் அவர்களுக்கு திரும்ப வழங்கிடவும் இதற்காகும் செலவினத்தொகை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றத்தீர்மானம் எண்.70 நாள்.27.05.2022

மன்றம் பதிவு செய்யப்பட்டது. அனுமதிக்கப்பட்டது.

2) அரசின் தற்போதைய உத்தரவுகளின்படி digital transaction பணப்பரிமாற்றம் செய்யப்பட வேண்டியபோது, வாகன ஒட்டுனரால் ரொக்கமாக செலுத்திய உரிய சான்று தாக்கல் செய்யப்பட்டதும், அவருக்கு தொகையை ரொக்கமாக வழங்கியதும் அரசு ஆணைக்கும் விதிமுறைகளுக்கும் புறம்பானதாகும். இந்த செயல்பாடு உண்மையானதா, முறையானதா என்பதை அறிய மயிலாடுதுறை மண்டலப்போக்குவரத்து அலுவலரிடம் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் 19.01.2023–ல் விண்ணப்பம் செய்யப்பட்டது.

3) மயிலாடுதுறை வட்டாரப்போக்குவரத்து அலுவலர்(பொது தகவல் அலுவலர்) அவரது கடித எண்.2115/அ.1/2023 நாள் 10.02.2023–ல் கீழ்க்கண்டவாறு தகவல் தரப்பட்டுள்ளது.

| வரிசை எண். | கேட்கப்பட்ட தகவல் | விபரம் |
|---|---|---|
| 01 | நகராட்சி வாகனத்திற்கு வாகன ஓட்டுநர் நேரடியாக தகுதிச்சான்றுக்கான கட்டணம் செலுத்த அரசு ஆணையில் வழிவகை உள்ள விவரம். | Vahan online-ல் பொதுமக்கள் நேரடியாக கட்டணம் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. |
| 02 | தகுதிச்சான்றுக்கான கட்டணத்தை ரொக்கமாக செலுத்த வழிவகை செய்யும் அரசாணை எண். | Vahan online–ல் பொதுமக்கள் நேரடியாக செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. |
| 03 | உயர்த்தப்பட்ட கட்டணம் ரூ.5000/– என்று இணையதளத்தில் பிரசுரம் ஆகியுள்ளது. ஆனால் ரூ.16758/– செலுத்தப்பட்டதாக நகர மன்ற தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்திற்கு எந்த தேதியில் யாரிடமிருந்து தொகை பெறப்பட்டது ?எவ்வளவு தொகை ரொக்கமாக பெறப்பட்டது ? எந்த தேதியில் ? எந்த தலைப்பில் ? என்ற விபரம் | Fitness inspection/certificate TN22021 C 7345974:- Rs.800-/ Service/User charge - 50/- (01 Feb.2022 06.40 pm.) Green Tax TN 220201C9345753 - Rs.505/- (01 Feb.2022) 05.22.57 pm.) MV tax TN 211231C9742800 - Rs.11783/- (31 Dec.2021) 10.41 .51 AM) All are online Payment. |
| 04 | TN51 S 5146 என்ற வாகனத்திற்கு எந்த தேதியில் தகுதிச்சான்று வழங்கப்பட்டது. | 03.02.2022 |

4) மேற்கண்ட செலவினம் குறித்து நகராட்சி ஆணையரிடமிருந்து தகவல்கள் கேட்டு 01.03.2023–ல் விண்ணப்பம் செய்தேன். நகராட்சி அலுவலக பொது தகவல் அலுவலர் கடித எண்.1113/2023/எப்.2 நாள். 10.04.2023–ல் கீழ்க்கண்டவாறு தகவல் தரப்பட்டுள்ளது.

| வரிசை எண். | கேட்கப்பட்ட தகவல் | கொடுக்கப்பட்ட தகவல் |
|---|---|---|
| 1 | கேள்வி எண்.1 | நகராட்சி வாகனத்திற்கு தனி நபர் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தவில்லை. ஆணையாளர் என்ற பெயரில் வாகனத்திற்கு புதுப்பித்தல் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. |
| 2 | கேள்வி எண்.2 | தனி நபர் எவரும் இல்லை. நகராட்சி ஓட்டுனர் ஆணையர் அனுமதியுடன் தொகை செலுத்தியுள்ளார். |
| 3 | கேள்வி எண்.3 | ஓட்டுநரின் சொந்த பொறுப்பில் தொகை செலுத்தி ஆணையர் பெயரில் செலுத்தப்பட்டதற்கு ரசீது பெறப்பட்டுள்ளது. |
| 4 | கேள்வி எண்.4 | 01.02.2022 தேதியில் பணம் செலுத்தியதற்கான ரசீது பெறப்பட்டுள்ளது. |
| 5 | கேள்வி எண்.5 | இதற்கான தொகையினை ஓட்டுனர் ஆணையர் அவர்களுக்கு எழுத்துமூலமாக கடிதத்துடன் ரசீது இணைத்து கேட்கப்பட்டதன் படி மன்ற ஒப்புதல்படி தொகையினை ஓட்டுனருக்கு அலுவலகம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் நகராட்சிக்கு நிதி இழப்போ, கையாடலோ ஏதும் நடைபெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது. |

5) நகராட்சி அலுவலக பொது தகவல் அலுவலர் கொடுத்த கடிதங்கள் தவறானதாக இருப்பதால் கூடுதல் விபரம் கோரியும், ஓட்டுனர் தாக்கல் செய்த, செலுத்துச்சீட்டு செலவுசீட்டு நகல் கோரி 13.04.2023–ல் விண்ணப்பம் செய்தேன். அதற்கான நகல் கட்டணத்திற்கு ரூ.10/–க்கான போஸ்டல் ஆர்டரும் அனுப்பப்பட்டது. அந்த விண்ணப்பம் 17.04.2023 அன்று நகராட்சி ஆணையரால் பெறப்பட்டுள்ளது.

6) ஆனால் இதுவரையில் (22.05.2023) செலுத்துச்சீட்டு நகல் மற்றும் தகவல்தரப்படவில்லை. எனவே தகவல் கோரும் உரிமைச்சட்டத்தின்படியும் நகராட்சி அலுவலக பொது தகவல் அலுவலர் மதிக்கவில்லை. மேற்கண்ட அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்ததில் கீழ்க்குறிப்பிட்ட முறைகேடுகள் நடந்துள்ளது தெள்ளத்தெளிவாக தெரிய வந்துள்ளது.

1) நகர்மன்ற தீர்மானத்தின்படி பட்டுவாடா செய்யப்பட்டுள்ள செலவுத்தொகை ரூ.16758/– என்று தெளிவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. வட்டாரப்போக்குவரத்து அலுவலரின் தகவலின்படி செலுத்தப்பட்ட தொகை ரூ.13138/– ஆகும். எனவே நேரடி நிதி கையாடல் ரூ.3620/– ஆவணங்கள் அடிப்படையில் நிரூபணம் ஆகியுள்ளது.

2) நகர்மன்ற தீர்மானத்தின்படியும், பொது தகவல் அலுவலர் கொடுத்த தகவலின்படியும் தொகை ரொக்கமாக செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் வட்டாரப்போக்குவரத்து அலுவலரின் கடிதப்படி தொகை முழுவதுமாக ஆன்லைனில் செலுத்தப்பட்டுள்ளதாக வட்டாரப் போக்குவரத்து

அலுவலரே அவரது கைப்பட எழுதி கையொப்பம் செய்து தகவல் கொடுத்துள்ளார். எனவே நகராட்சியின் பொது தகவல் அலுவலர் பொய்யான தகவல் அளித்துள்ளார்.

3) நிதி நிர்வாகம் கையாளுவதற்கு உதவியாளர், கணக்கர், மேலாளர் ஆகியோரும் இருக்கும்போது இந்த பணியை ஓட்டுநர் வசம் அதிகாரப்பூர்வமாக ஆணையர் உத்தரவிட்டதாக தெரிவித்துள்ளது அதிகார துஷ்பிரயோகமாகும்.

4) மயிலாடுதுறை நகராட்சி ஆணையர், மேலாளர், கணக்கர் மற்றும் பிரிவு உதவியாளர், தொகை பட்டுவாடா செய்ய நகர்மன்றத்திற்கு அலுவலகக்குறிப்பு வைத்த அனைவருமே போலியான செலுத்துச்சீட்டின் அடிப்படையில் மிகையான தொகை வழங்கி நேரடியாக நிதி கையாடல் செய்துள்ளனர்.

<u>கோரும் பரிகாரம்.</u>

எனவே சுயலாபத்திற்காக நகராட்சி ஆணையர், அலுவலக மேலாளர், கணக்கர் சம்மந்தப்பட்ட உதவியாளர் (அ) இளநிலை உதவியாளர் ஆகியோரால் நிதி கையாடல், போலி செலவுச்சீட்டு அடிப்படையில் தொகை பட்டுவாடா செய்துள்ளதால் இ.த.ச. 420 (ஏமாற்றுதல்) மற்றும் இ.த.ச.409 (நம்பிக்கை மோசடி) இ.த.ச.463 (போலி ஆவணம் தயாரித்தது) ஆகிய குற்றச்செயல்கள் புரிந்துள்ளார்கள் என்பதால் தகுந்த விசாரணை அமைப்பான குற்றப்புலனாய்வு (Crime Branch) மூலம் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளவும்.

கையாடல் செய்த நபர்களை உடனடியாக தற்காலிக பணி நீக்கம் செய்து, நகராட்சிப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி) 8–ன் கீழ் தற்காலிக பணி நீக்கம் செய்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட மாண்பமை நடுவர் மன்றத்தை பணிவுடன் பிரார்த்திக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2.** மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ **02.06.2023** மற்றும் **22.07.2024** நாளிட்ட அறிவிப்புகளின் மூலம் மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

**3.** மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் தனது **15.07.2023** நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

"வாதியால் நகராட்சியின் பல்வேறு வழக்குகளுக்கு நகராட்சியால் நியமிக்கப்பட்டு, வழக்குகள் மற்றும் வழக்குகள் நடத்திய வழக்கறிஞர்களின் விபரங்கள் குறித்தும் அவர்களுக்கு நகராட்சியால் வழங்கப்பட்ட வழக்குக்கட்டணங்கள் விபரங்களும் கீழ்க்கண்டவாறு திரு.வ.பழனிவேலு என்பவருக்கு இந்நகர் மன்றத்தீர்மானங்களின் அடிப்படையில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விரிவான கேள்விகளுக்கு பின்வருமாறு பதில் அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| வரிசை எண். | வாதியால் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்கள் விபரம் | | நகராட்சி நிர்வாகத்தினரால் அளிக்கப்படும் பதில் அறிக்கை |
|---|---|---|---|
| 1. | நகர்மன்ற தீர்மானத்தின்படியும் பட்டுவாடா செய்யப்பட்டுள்ள செலவுத் தொகை ரூ.16758/– என்று தெளிவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.<br>வட்டாரப்போக்குவரத்து அலுவலரின் தகவலின்படி செலுத்தப்பட்ட தொகை ரூ.13138/– ஆகும். எனவே நேரடி நிதி கையாடல் ரூ.3620/– ஆவணங்கள் அடிப்படையில் நிரூபணம் ஆகியுள்ளது. | – | மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதார வாகன எண்.TN51 S 5146 சான்று சொந்த பணத்தில் இருந்து கீழ்க்கண்ட பில்படி ரூ.16758/– செலவு செய்யப்பட்டு அதற்கு உண்டான பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதில் எந்த ஒரு கையாடலும் நடைபெறவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 2. | நகர்மன்ற தீர்மனத்தின்படி பொது தகவல் அலுவலர் கொடுத்த தகவலின்படியும் தொகை ரொக்கமாக செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் வட்டாரப்போக்குவரத்து அலுவலரின் கடிதப்படி தொகை முழுவதுமாக ஆன்லைனில் செலுத்தப்பட்டுள்ளதாக வட்டாரப்போக்குவரத்து அலுவலரே தனது கைப்பட எழுதி கையொப்பம் செய்து தகவல் கொடுத்துள்ளார். எனவே நகராட்சியின் பொது தகவல் அலுவலர் பொய்யான தகவல் அளித்துள்ளார். | – | பொது சுகாதாரம் வாகனம் தகுதிச்சான்று பெறுவதற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஆன்லைன் மூலமாக செலுத்தப்பட வேண்டும். நகராட்சியில் ஆன்லைனில் செலுத்துவதற்கான வழிவகை இல்லை. மேலும் ஒரு வாகனம் தகுதிச்சான்று பெறுவதற்கு வட்டாரப்போக்குவரத்து கழகத்திற்கு ஆன்லைனில் செலுத்த வேண்டிய தொகை மற்றும் புகை சான்று, வாகன ஸ்டிக்கர் தயார் செய்யப்பட்ட பின்பே வட்டார போக்குவரத்து கழகத்தால் தகுதிச்சான்று பெறமுடியும். ஆகையால் நகராட்சி வாகன தகுதி சான்று பெறுவதற்கு வட்டாரப்போக்குவரத்து அலுவலகம், புகை சான்று மற்றும் ஸ்டிக்கர், நம்பர் பிளேட் ஆகியவற்றிற்காக சேர்த்து தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. இது உண்மை தகவல்களை அளிக்கப்படுகிறது. இதில் எந்த தவறும் நடைபெறவில்லை. |
| 3 | நிதி நிர்வாகம் கையாளுவதற்கு உதவியாளர் கணக்கர் மேலாளர் ஆகியோர் இருக்கும்போது இந்த பணியை ஓட்டுனர் வசம் அதிகாரப்பூர்வமாக ஆணையர் உத்தரவிட்டதாக தெரிவித்துள்ளது அதிகார துஷ்பிரயோகமாகும். | – | நகராட்சியில் ஒவ்வொரு பணிகள் நடைபெறும் போது பணிகள்முடிவு பெற்று அதற்கான தொகைகள் பெறும்போது அந்த தொகைக்கான பட்டியலின்படி சரிபார்க்கப்பட்டு பட்டியலில் அவர்களின் சான்றுகள் பெறப்பட்டு அதன் பின்பு தொகையினை நகராட்சியில் வட்டார போக்குவரத்து கழகத்திற்கு ஆன்லைனில் செலுத்துவதற்கு வசதி இல்லாததால் நகராட்சியின் நிரந்தர ஓட்டுநரின் பெயரில் காசோலை வழங்கப்பட்டு வாகனம் தகுதிச்சான்று பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. இதில் எந்தவித அதிகாரம் துஷ்பிரயோக நடவடிக்கையும் இல்லை என பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது. |
| 4 | மயிலாடுதுறை நகராட்சி ஆணையர், மேலாளர், கணக்கர், மற்றும் பிரிவு உதவியாளர், தொகை பட்டுவாடா செய்ய நகர்மன்றத்திற்கு அலுவலகக்குறிப்பு வைத்த அனைவருமே போலியான செலுத்துச்சீட்டின் அடிப்படையில் மிகையாக தொகை வழங்கி நேரடியாக நிதி கையாடல் செய்துள்ளார்கள். | – | நகராட்சி வாகனம் தகுதிச்சான்று பெறுவதற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்தப்பட்ட ரசீதுகளின் நகல், புகை சான்று நகல் மற்றும் வாகனத்திற்கு ஸ்டிக்கர், நம்பர் பிளேட் ஆகியவற்றிற்கான செய்யப்பட்ட செலவினத்தின் விவரங்களை நகர்மன்றத்தில் தெரிவிக்கப்பட்டு பின்பு நகர்மன்றம் ஒப்புதல் பெற்று தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் மிகையான நடவடிக்கையில் தொகை வழங்கப்படவில்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது. |

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் ஆகியோரும் 12.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு 28.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. பின்னர் மேற்படி விசாரணை 13.09.2024 அன்று நடைபெறும் என இம்முறைமன்ற நடுவ 02.09.2024

நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்கும், மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கும் தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகு மனுதாரர் 13.09.2024 அன்றைய நேரடி விசாரணையில் கலந்து கொள்ள இயலவில்லை என தெரிவித்து மாற்று நாளில் விசாரணை தேதி கோரியதால் இம்முறைமன்ற நடுவ 10.09.2024 நாளிட்ட கடிதம் மூலம் 03.10.2024 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கும் தெரிவிக்கப்பட்டது.

4. மனுதாரர் திரு.V.பழனிவேலு 03.10.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மேற்கண்ட வழக்கில் இன்று 03.10.2024 நேரில் ஆஜராகி எனது வாக்குமூலத்தினை கீழ்க்கண்டவாறு பதிவு செய்கிறேன். எதிர்மனுதாரர்/நகராட்சி ஆணையரின் அறிக்கை நகல் வழங்க வேண்டுகிறேன். என்னால் புகாருக்கு ஆதாரமான ஆவணங்கள் யாவும் புகார் மனுவுடன் தாக்கல் செய்துள்ளேன். இதில் இணையதளத்தில் புதுப்பித்தல், கட்டணம் செலுத்தப்பட்டதற்கான ஒப்புதல் சீட்டு தொகை வழங்கி சிபாரிசு செய்த அலுவலர் கடிதம் வட்டாரபோக்குவரத்து கழக அலுவலகம் வழங்கிய இணை தள வழி செலுத்திய ரசீது நாள் 01.02.2022 இரண்டு ரசீதுகள்.

31.12.2021–ல் செலுத்திய ரசீது நகல்கள் எனக்கு வழங்க வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| நகர்மன்ற தீர்மானத்தின்படி | ரூ.16758/– |
| ஆனால் வட்டாரப்போக்குவரத்து அலுவலக தகவல்படி செலுத்தப்பட்ட தொகை | ரூ.13138/– |
| கையாடல் | ரூ. 3620/– |

இதற்கு காரணமாக இருந்தவர்களிடம் நகராட்சி நிதி மேலாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டப்படுகிறது".

5) நகராட்சி ஆணையாளர் சார்பாக மயிலாடுதுறை நகராட்சியில் சுகாதார ஆய்வாளர் 03.10.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதார வாகன எண்.டி.என்.51 எஸ்.5146க்கான சான்று திரு.ஏழுமலை என்பவரது சொந்த பணத்தில் இருந்து கீழ்கண்ட பில்படி ரூ.16758/– செலவு செய்யப்பட்டு அதற்கு உண்டான பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதில் எந்த ஒரு கையாடலும் நடைபெறவில்லை என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பொதுமக்கள் நேரடியாக பணம் செலுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது. எனவே வாகன தகுதிச்சான்று பெறுவதற்கு பணம் நேரடியாக நிரந்தர ஓட்டுனர் திரு.ஏழுமலை என்பவர் மூலம் செலுத்தப்பட்டது. மேலும் ஒரு வாகனம் தகுதிச்சான்று பெறுவதற்கு வட்டார போக்கு வரத்து அலுவலகத்திற்கு ஆன்லைனில் செலுத்த வேண்டிய தொகை மற்றும் புகை சான்று, வாகன ஸ்டிக்கர் தயார் செய்யப்பட்ட பின்பே வட்டார போக்குவரத்து அலுவலகத்தால் தகுதிச்சான்று பெற முடியும். ஆகையால் நகராட்சி வாகனம் தகுதிச்சான்று பெறுவதற்கு வட்டார போக்குவரத்து அலுவலகம், புகை சான்று மற்றும் ஸ்டிக்கர், நம்பர் பிளேட் ஆகியவற்றிற்காக சேர்த்து தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. இது உண்மையான தகவல்கள் ஆகும். இதில் எந்த தவறும் நடைபெறவில்லை.

நகராட்சியில் ஒவ்வொரு பணிகள் நடைபெறும் போதும் பணிகள் முடிவு பெற்று அதற்கான தொகைகள் பெறும்போது அந்த தொகைக்கான பட்டியலின்படி சரிபார்க்கப்பட்டு பட்டியலில் அவர்களின் சான்றுகள் பெறப்பட்டு அதன் பின்பு தொகையினை நகராட்சியில் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ஆன்லைனில் செலுத்துவதற்கு வசதி இல்லாததால் நகராட்சியின் நிரந்தர ஓட்டுனர் பெயரில் காசோலை வழங்கப்பட்டு வாகனம் தகுதிச்சான்று பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித அதிகார துஷ்பிரயோக நடவடிக்கையும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

நகராட்சி வாகனம் தகுதிச்சான்று பெறுவதற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்தப்பட்ட ரசீதுகளின் நகல், புகை சான்று நகல் மற்றும் வாகனத்திற்கு ஸ்டிக்கர், நம்பர் பிளேட் ஆகியவற்றிற்காக செய்யப்பட்ட செலவினத்தின் விவரங்களை நகர்மன்றத்தில் தெரிவிக்கப்பட்டு பின்பு நகர்மன்றம் ஒப்புதல் பெற்று தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் மிகையான நடவடிக்கையில் தொகை வழங்கப்படவில்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இம்மனு தொடர்பான ஆதார ஆவணங்களை இம்முறைமன்ற நடுவத்தில் இன்று **03.10.2024** சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

**6)** மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மயிலாடுதுறை நகராட்சியில் பணிபுரியும் சுகாதார ஆய்வாளர் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் மயிலாடுதுறை நகராட்சியில் சுகாதார பிரிவு வாகனத்திற்கு **2022–23**ம் ஆண்டு தகுதிச்சான்று பெற்றமைக்கு போலியான ரசீது மூலம் நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது மற்றும் ரூ.**3620/–** கூடுதலாக தெரிவித்து கையாடல் செய்யப்பட்டுள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் பொதுமக்கள் நேரடியாக பணம் செலுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டிருந்ததால், சுகாதார பிரிவு வாகனத்திற்கு **2022–23**ம் ஆண்டிற்கான வாகன தகுதிச்சான்று பெறுவதற்கு ரூ.**16,758/–**ல் நேரடியாக நிரந்தர ஓட்டுநர் திரு. ஏழுமலை என்பவருக்கு வழங்கப்பட்டது. ஓட்டுநர் திரு. ஏழுமலை ரூ.**13,148/–**க்கு (Fitness Certificate - Rs.800/- Service/User charge - 50/- Green Tax - Rs.505/- MV tax Rs.11783/- Service/User charge - 10/- ) முறையாக போக்குவரத்து துறையில் online மூலம் செலுத்தப்பட்டதற்கான பட்டியல்களை நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார் மேலும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ஆன்லைனில் செலுத்த வேண்டிய தொகை மற்றும் புகை சான்று, வாகன ஸ்டிக்கர் தயார் செய்யப்பட்ட பின்னரே வட்டார போக்குவரத்து அலுவலகத்தால் தகுதிச்சான்று பெறமுடியும் என்ற நிலையில், புகை சான்று ரூ. **110/–** மற்றும் வாகன ஸ்டிக்கர் தயார் செய்தவகையில் ரூ. **3500/–** என ரூ. **3610/–** ஓட்டுநர் திரு. ஏழுமலை என்பவரால் செலவினம் மேற்கொள்ளப்பட்டு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி செலவினம் ரூ.**16,758/–** மன்றத்தீர்மானம் எண்.70, நாள் 27.05.2022–ன் வழி அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி ஆணையரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் வாயிலாக அறியவருகிறது.

இந்நேர்வில், இப்பொருள் தொடர்பான பட்டியல்களை எதிர்வரும் தணிக்கையின் போது சமர்ப்பித்து, அத்தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள மயிலாடுதுறை நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 23–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.V.பழனிவேலு,
த/பெ. திரு.வடிவேலு,
எண்.48, திருமஞ்சன வீதி,
கொறநாடு,மயிலாடுதுறை – 609 001,
மயிலாடுதுறை மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
மயிலாடுதுறை நகராட்சி,
மயிலாடுதுறை,
மயிலாடுதுறை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032

29/4/25
செயலாளர்.